வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4304/ஆ3/2023 நாள். .02.2024

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2023-24 கல்வியாண்டு – SC/ST/SCC PreMatric & PostMatric கல்வி உதவி தொகை – 15.02.2024அன்றைய நிலையில் வங்கிக் கணக்கு எண் செயல்பாடற்ற நிலையிலுள்ள மாணாக்கர்களின் ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைத்தல் மற்றும் Postal Bank மூலம் வங்கிக் கணக்கு துவங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சார்பாக.

பார்வை: வேலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே6/162/2024 நாள்.21.02.2024

-----

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வேலூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் 2023-24 கல்வியாண்டில் – SC/ST/SCC பிரிவில் பயிலும் மாணாக்கர்களுக்கு PreMatric & PostMatric கல்வி உதவி தொகை வழங்கும் பொருட்டு 15.02.2024 அன்றைய நிலவரப்படி PreMatric கல்வி உதவித் தொகை 1775 மற்றும் PostMatric கல்வி உதவித் தொகை 1475 ஆக மொத்தம் 3250 மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு எண்கள் செயல்பாடற்ற நிலையில் உள்ளதால் மாணாக்கர்களின் வங்கிக்கணக்கிற்கு கல்வி உதவித்தொகை செலுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மாணாக்கர்களின் வங்கிக்கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்து அல்லது Postal Bank மூலம் வங்கிக் கணக்கு துவங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் இதில் காலதாமதம் ஏற்பட்டு மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை பெறப்படாத நிலை ஏற்படின் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களே முழுபொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

27/2/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

27/02/24

பெறுநர்
தலைமைஆசிரியர்கள்
அரசு நகரவை/ ஆ.தி.ந/ அரசு உதவிபெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்.
வேலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

Scanned with AnyScanner